1978 மார்ச் 6]

*403 வினு—திரு. ர. ஜெபமணி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சாத்தான்குளம் யூனியனில் உள்ள விவசாயிகளின் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு கிடைக்காமல் உள்ளது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) மற்றும் (ஆ): நிலுவையில் உள்ள மனுக்களுக்கு மின் இணைப்பு வழங்க அரசு ஒரு முன்னுரிமைப் பட்டியல் தயாரித்துள்ளது. இந்த வழிமுறைக்கு ஏற்ப மின் இணைப்பு வழங்கப்படுகிறது.

திரு. ர. ஜெபமணி: சட்டப்பேரவைத் தலைவரவர்களே, திருச்செந்தூர் தாலுகா பின்தங்கிய தாலுகாவாக இருக்கிறது. அந்தத் தாலுகாவில் சாத்தான்குளம் மிகவும் பின்தங்கியது. அந்த யூனியனுக்கு மட்டும் மின்னிணைப்பு கிடையாது என்று அரசாங்கம் அறிவித்திருப்பதாக அதிகாரிகள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அதனால் அங்கே இருக்கிற விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அதனால் என்ன காரணம் என்பதை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, சாத்தான்குளம் ஒன்றியத்தில் 1,159 மனுக்கள் வந்திருக்கின்றன. அவற்றில் 35 மனுக்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. 496 மனுக்கள் ஆதாயமற்றது என்ற காரணத்தால் நிராகரிக்கப் பட்டன. மீதம் 628 மனுக்கள் பற்றி மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

புலவர் கா. கோவிந்தன்: தலைவரவர்களே, நிலவள வங்கிகள் கடன் கொடுக்கின்ற நேரத்தில், அந்தக் கடனைக்கொண்டு கிணறு வெட்டி, ஆயில் எஞ்சின் அல்லது மின்சார மோட்டார் வைத்திருந்தால், அவர்கள் பாதிக்கப்படாத வகையில் அவர்களுக்காவது மின்சார இணைப்புக் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, அப்படிப்பட்ட கிணறுகளுக்கு ஏற்கெனவே அனுமதி வழங்கப் பட்டிருந்தால் மின்னிணைப்பு கிடைக்கும். 'சாங்ஷன்' ஆகாமல் இருந்தால் கொடுக்க இயலாது.

புலவர் கா. கோவிந்தன்: அப்படிப்பட்ட விவசாயிகள் 1969 ஆம் ஆண்டிலேயே கடன் வாங்கியும், இன்னும் மின்னிணைப்புக் கிடைக்காமல் கஷ்டப்படுகிறார்கள். அப்படிப்பட்டவர்களுக் காவது உடனடியாக மின்னிணைப்பு கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, அம்மாதிரி இருந்தால் அதை அரசு பரிசீலிக்கும்.

தூக்கு தண்டனையை நீக்குதல்.

* 404 வினா—திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா, திரு. துரை கலிமூர்த்தி, திரு. எஸ். கணேசன், திரு. வி. கே. கோதண்டராமன்: மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தூக்கு தண்டனையை ஒழிக்கும் யோசனை அரசின் பரிசிலனையில் இருக்கிறதா?

(ஆ) தமிழ்நாடு சிறைகளில் உள்ள ஆயுள் தண்டனைக் குற்றவாளிகளின் எண்ணிக்கை என்ன?

(இ) ஆயுள் தண்டனைக் காலம் என்பது எத்தனை ஆண்டுகள்?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR:

(*a*) No.

(*b*) There are 2,653 life prisoners confined in Tamil Nadu as on 5—11—1977.

(*c*) 20 years.

திரு. எஸ். கணேசன், தலைவரவர்களே, இந்த ஆயுள் தண்டனை என்பது மற்ற மாநிலங்களில் 7 ஆண்டு, 8 ஆண்டு என்று இருப் பதாகச் சொல்லப்படுகிறது. பொதுவாகவே, ஆயுள் தண்டனை பெற்று, சிறைச் சாலைகளில் இருக்கிற குற்றவாளிகள் 4 அல்லது 5 ஆண்டுக் காலத்தில் நேர்மையாளர்களாகவும் ஒழுக்கமுள்ளவர்